பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 06 2024 7 15

வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரெளபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.

2. போதைப்பொருட்கள் இல்லா இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. தொலைதொடர்பு சேவைகளின் மேம்பாட்டை உறுதி செய்ய மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அத்துறைக்கான அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

4. கென்யாவில் வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து புதிய வரி மசோதா திரும்பப் பெறப்படுவதாக அந்நாட்டு அதிபர் திரு. வில்லியம் ரூட்டோ அறிவித்துள்ளார்.

5. 63-வது தேசிய சீனியர் தடகள போட்டி ஹரியானாவின் பஞ்ச்குலாவில் இன்று தொடங்குகிறது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>

நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.

பதினெட்டாவது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் கடந்த திங்கள்கிழமை தொடங்கிய நிலையில் கடந்த சில நாட்களாக உறுப்பினர்கள் பதவியேற்பு மற்றும் அவைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில் மாநிலங்களவை கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவரின் உரை இன்று இடம்பெறுகிறது.

அதைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதன் மீது விவாதம் நடைபெறும்.

<<<<>>>>

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

காசியாபாதில் உள்ள மத்திய மின்னணுவியல் நிறுவனத்தின் பொன்விழா கொண்டாட்டத்தில் நேற்று அவர் பங்கேற்று உரையாற்றினார்.

விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் புதிய இந்தியாவின் சிற்பிகளாக செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

சூரிய மின்சக்தி துறையில் இந்த நிறுவனம் முக்கிய பங்காற்றுவது பாராட்டத்தக்கது என்று அவர் கூறினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியே எதிர்கால தீர்வாக அமையும் என்று திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நஷ்டத்தில் இயங்கிய இந்த நிறுவனம், தற்போது லாபத்தில் இயங்கி, மினி ரத்னா அந்தஸ்தைப் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

போதைப்பொருட்கள் இல்லா இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், போதைப்பொருட்கள் தனி நபர்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சமூகத்திற்கும், தேச பாதுகாப்பிற்கும் சவாலாக உள்ளது என்று கூறியுள்ளார்.

போதைப்பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் சமரசமற்ற வகையில் மத்திய அரசு செயல்படுவதாக திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தொலைத்தொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்களின் அலைக்கற்றை தேவைகளை பூர்த்தி செய்யவும், கைபேசி சேவைகளை மேம்படுத்தும் நோக்கிலும் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான அலைக்கற்றை ஏலம் நேற்று நிறைவடைந்தது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான ஏலத்தில் 900 மெகாஹெர்ட்ஸ், 1800 மெகா ஹெர்ட்ஸ், 2100 மெகா ஹெர்ட்ஸ் மற்றும் 2500 மெகா ஹெர்ட்ஸுக்கான அலைக்கற்றைகள் ஏலம் எடுக்கப்பட்டதாக தொலைத் தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிப்படையான நடைமுறைகளின் கீழ் அலைக்கற்றை ஏலம் நடைபெற்றதாகக் கூறியுள்ளார்.

நாட்டின் தொலைத்தொடர்பு சேவைகளின் மேம்பாட்டை உறுதி செய்ய மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று திரு ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

முன்னாள் துணைப் பிரதமரும் பிஜேபி மூத்த தலைவருமான திரு எல்கே அத்வானி உடல் நலக்குறைவு காரணமாக தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதுமை தொடர்பான உடல் உபாதைகள் காரணமாக நேற்று இரவு அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். திரு எல்கே அத்வானியின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் தொடர்ந்து மருத்துவ கண்காணிப்பில் அவர் இருந்து வருவதாகவும் தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்துவதில்லை என்ற கோட்பாட்டின்படி இந்தியா செயல்படுவதாக முப்படைகளின் தளபதி திரு. அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அணுசக்தி தொடர்பான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

புவிசார் அரசியல் தளத்தில் அணு ஆயுத அச்சுறுத்தல் மீண்டும் தலைதூக்கி இருப்பதாகக் கூறினார்.

பாதுகாப்பை வலுப்படுத்த புதிய கோட்பாடுகள், கண்காணிப்பு, உளவு தகவல்கள் போன்றவை அவசியம் என்று திரு. அனில் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

அமர்நாத் யாத்திரை தொடர்பான ஏற்பாடுகள் குறித்து கஷ்மீர் பள்ளத்தாக்கின் சந்தன்வாரி முகாமில் அந்த யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா நேற்று ஆய்வு செய்தார்.

உணவு, சுகாதாரம், குடிநீர் வழங்கல் மற்றும் பிற வசதிகள் குறித்து அவர் ஆய்வு செய்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆண்டு அமர்நாத் யாத்திரை நாளை மறுநாள் தொடங்குகிறது.

இதனிடையே இந்த யாத்திரையை முன்னிட்டு பஹல்காம் பகுதியில் மத்திய ரிசர்வ் காவல் படையினர் நேற்று பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் தோடா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது நேற்று ஒரே நாளில் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கண்டோஹ் பகுதியில் உள்ள பஜாத் கிராமத்தில் பாதுகாப்புப் படையினர் நேற்று மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர்.

இதையடுத்து பாதுகாப்புப் படையினர் திருப்பிச் சுட்டதில் தீவிரவாதி ஒருவர் உயிரிழந்தார்.

தொடர்ந்து அப்பகுதியில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளின்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் மேலும் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அப்பகுதியில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுதாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

சர்வதேச குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இது தொடர்பாக நடைபெறும் நிகழ்ச்சியில் குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. ஜித்தன்ராம் மஞ்சி, இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்துக்கு கடந்த ஆண்டில் 48 கோடி சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக அந்த மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்ற சுற்றுலா தொடர்பான மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர் காசிக்கு மட்டும் கடந்த ஆண்டில் 10 கோடி பேர் வந்ததாகக் கூறினார்.

இந்த ஆண்டு ராமர் ஆலயம் திறக்கப்பட்ட பின்னர் அயோத்திக்கு சராசரியாக தினமும் ஒன்றரை லட்சம் முதல் இரண்டு லட்சம் பேர் வருவதாக திரு யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-காஷ்மீருக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அந்த யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா கூறியுள்ளார்.

ஸ்ரீநகரில் இரண்டு நாட்கள் நடைபெறும் சுற்றுலா மேம்பாட்டு மாநாட்டை நேற்று அவர் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த சில ஆண்டுகளில் 300 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஹிமாச்சலப் பிரதேசத்தில் மூன்று சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் மொத்தம் 13 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இந்த தொகுதிகளில் ஜூலை 10-ம் தேதி இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

நேற்று இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில் ஹமீர்பூர் மற்றும் தேரா தொகுதிகளில் தலா 5 வேட்பாளர்களும் நலகர் தொகுதியில் 3 வேட்பாளர்களும் களத்தில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாட்டின் மேற்கு கடற்கரைப் பகுதிகளின் சில இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேபோல் இன்று முதல் 30-ம் தேதி வரை வடகிழக்குப் பகுதியின் சில இடங்களிலும் அதி கனமழை பெய்யக்கூடும் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட இடங்களில் தென்மேற்கு பருவமழை வலுவடைய வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கர், மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், பீகார், உத்தரப் பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசம், ஹரியானா, உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் எஞ்சியுள்ள பகுதிகளில் அடுத்த சில நாட்களில் பருவமழை தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஒடிசாவின் பல பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தின் பல பகுதிகளிலும் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

அந்த மாநிலத்தின் 8 மாவட்டங்களுக்கு மழை தொடர்பான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ராஜஸ்தான் மற்றும் பஞ்சாபின் சில பகுதிகளில் நிலவும் கடும் வெப்பம் அடுத்த சில நாட்களுக்கு நீடிக்கும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த பகுதிகளில் அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கென்யாவில் புதிய வரி மசோதா திரும்பப் பெறப்படுவதாக அந்நாட்டு அதிபர் திரு. வில்லியம் ரூட்டோ அறிவித்துள்ளார்.

இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வன்முறை சம்பவங்கள் நடைபெற்றதை அடுத்து அதிபர், இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதனிடையே வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது.

300-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக கென்ய தேசிய மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

63-வது தேசிய சீனியர் தடகள போட்டி ஹரியானாவின் பஞ்ச்குலாவில் இன்று தொடங்குகிறது.

மாநிலங்களுக்கு இடையேயான இப்போட்டி நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் பல்வேறு பிரிவுகளில் நீரஜ் சோப்ரா, தேஜிந்தர் பால் சிங் தூர், ஜோதி யராஜி, அன்னு ராணி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முன்னணி வீரர் வீராங்கனைகள் உட்பட 752 பேர் பங்கேற்கின்றனர்.

இது தவிர இலங்கை மற்றும் மாலத்தீவைச் சேர்ந்த வீரர்களும் இப்போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

<<<<>>>>

உலக கோப்பை டுவெண்டி டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற 57 ரன் என்ற இலக்கை ஆஃப்கனிஸ்தான் நிர்ணயித்துள்ளது.

டிரினிடாட்டில் தற்போது நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆஃப்கனிஸ்தான், 11 புள்ளி 5 ஓவரில் 56 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>

சூப்பர்பெட் செஸ் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் குகேஷ் வெற்றி பெற்றார்.

ருமேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்றில் அவர், ருமேனியாவின் போக்டன்-டேனியல் டீக்கை வென்றார்.

இந்தியாவின் பிரக்ஞானந்தா - உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசட்டோரோ இடையே நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் டிரா ஆனது.

**<<<<The End>>>>**